தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 22, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 5, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்."

விளைந்த பயிரைப் பார்த்தாலே இது எந்த நிலத்தில் விளைந்தது என்று அறிந்து கொள்ளலாம். அதேபோல ஒருவரின் வாய்ச் சொல்லைக் கேட்டே அவர் எத்தகைய குடியில் பிறந்தவர் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 101, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

102—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***49969—திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 5

நத்தம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 19 சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 12 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 14 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், நத்தம் தொகுதியில் புதியதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் வந்துவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, உங்களுக்குக் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். அங்கு நகராட்சி கிடையாது. அங்கு ஒரே ஒரு பேரூராட்சிதான் இருக்கிறது. கிராமப்புற மக்கள் அதிகமாக வசிக்கின்ற இந்தப் பகுதியில், கிராமப்புற மாணவ, மாணவிகள் அனைவரும் உயர் கல்வி படிப்பதற்கு வசதியாக*

2023 ஏப்ரல் 5]
அரசின் சார்பாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், பல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலேயே மாணவ, மாணவியர்கள் சேராமல் இப்போது காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, 16,201 இடங்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கே சேர்ந்திருக்கும் மாணவர்கள் 7,093. 9,108 இடங்கள் காலியாக இருக்கின்றன. மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் போன வருடம்தான் இரண்டு அரசு கலைக் கல்லூரிகள் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கின்றன. உங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை என்று நீங்கள் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற முறையே எந்தெந்த தொகுதிகளிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லையோ அங்கேயெல்லாம் அரசு கலைக் கல்லூரிகளை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். கல்லூரிகள் அறிவிக்கப்படுகிறபோது, உங்கள் தொகுதிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, நிச்சயமாக அதுவும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் கல்லூரிகள் பல இருந்தாலுங்கூட, அரசு கல்லூரி இல்லை என்பதால்தான், ஏழை மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கு வசதியாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். மானியக் கோரிக்கையில் ஏற்கெனவே நான் பேசுகின்றபோதுகூட இதைச் சொல்லியிருக்கின்றேன். அதாவது,*

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத்தர அனுமதி அளிக்கப்படுமேயானால், கல்லூரி அமைப்பதற்குரிய தேவையான இடத்தை எனது சொந்தப் பொறுப்பிலேயே வழங்குகின்றேன் என்றுகூட சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிக கல்லூரிகள் இருக்கின்றன என்று சொல்லி தட்டிக் கழித்துவிடாமல், நத்தம் தொகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லையென்பதால், சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வரவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலாவது, நத்தம் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்கள் பயனடைகின்ற வகையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி, ஆளுங்கட்சி என்றெல்லாம் பார்க்காமல் (குறுக்கீடு) உடனே கையாட்டுகிறார் பாருங்கள். அவருடைய தொகுதியிலும் நாங்கள் சென்ற ஆண்டு கல்லூரியைத் தொடங்கியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுடைய தொகுதியிலும் கல்லூரி தொடங்கியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: கோரிய எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது மிகவும் நியாயமான கோரிக்கை. அந்த அடிப்படையில் அதைச் செய்து தருவதற்கான சில சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே திண்டுக்கல் மாவட்டத்தில்தான் இடம் இருக்கிறது; நத்தம் தொகுதியில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நத்தம்

2023 ஏப்ரல் 5]

தொகுதியில் மட்டும் தனியார் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் 3,725. ஆனால், கல்லூரிகளில் சேர்ந்திருப்பவர்கள் 1,643 பேர். 2082 இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே தனியார் கல்லூரிகள்தான் இருக்கின்றன. அங்கு அரசுக் கல்லூரிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, வெகுவிரைவில் நிதிநிலைக்கேற்ப புதியதாக கல்லூரியை உருவாக்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் யார் கேட்டாலும்—திரு. ஜி.கே. மணி அவர்களும் இதே கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள்—எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளையும் கேட்டு, எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். தோழமைக் கட்சியிலிருக்கின்ற திரு. செல்வபெருந்தகை அவர்கள் இதே கோரிக்கையைக் கேட்டிருந்தார்கள். அவரது தொகுதியிலும் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறோம். கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் கைதூக்குகிறார்கள். எல்லோரும் கேட்டு, எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, வருங்காலத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரியை அந்தப் பகுதியில் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்வார் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதியில் ஓர் அரசு கல்லூரிகூட கிடையாது. இன்னும் சொல்லப்போனால், மதுரை மாநகரிலேயே ஓர் அரசு கல்லூரிதான் 1962–ல் தொடங்கப்பட்டது; அதற்குப் பிறகு எந்தக் கல்லூரியும் தொடங்கப்படவில்லை. அதுவும் மகளிர் கல்லூரி மட்டுமே இருக்கிறது. மற்றவையெல்லாம் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தவொரு அரசு கல்லூரியும் இல்லாமல் இருக்கிறது. எங்கள் தொகுதியில் விளாங்குடி பகுதியில் ஏறத்தாழ 3½ ஏக்கர் நத்தம் புறம்போக்கு இடம் காலியாக இருக்கிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு*

அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து முதலில் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் நீங்கள் அமைச்சராக இருந்தும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அங்கு கல்லூரியைத் தொடங்க அனுமதி கொடுப்பார்கள்; நான் அதை வாங்கிக் கொடுப்பேன் என்று கடந்த ஆண்டிலும் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நிறைவேற்றித் தரச் சொல்லுங்கள். அதை வாங்கித் தருவது உங்கள் கையில்தான் இருக்கிறது என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் அவர்களே கோரிக்கை வைக்க வேண்டிய கட்டாயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடுதான் நீங்களும் இந்தக் கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையைப் பொறுத்தவரையில், மதுரை பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளெல்லாம் அரசு கல்லூரிகளாக ஏற்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் 6+1=7 உறுப்புக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் இதுகுறித்துதான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அரசு கல்லூரிகளாக்கப்படும். மதுரையைப் பொறுத்தவரையில், கல்வியில் மிகச் சிறந்திருப்பதால்தான் பல்கலைக்கழகம் அங்கே இருக்கிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கையை ஏற்று, வருங்காலங்களில் தேவை ஏற்படின் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நான் கேட்காமலேயே சபாநாயகராகிய என்னுடைய தொகுதியில் திசையன்விளை, பணகுடி ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு உறுப்புக் கல்லூரிகளும் அரசு கல்லூரிகளாக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

2023 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களை உள்ளடக்கிய தொகுதிகளாக கீழ்பெண்ணாத்தூர், செங்கம் போன்ற தொகுதிகள் இருக்கின்றன. நகரத்திலுள்ள தொகுதிகளில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன. ஆனால், கிராமப்புறங்கள் உள்ள தொகுதிகளில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படாமல், இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான இடத்தைக் கொடுத்து, ஏற்கெனவே ரூ.1 கோடி டெபாசிட் செய்தால் புதிய கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்படும் என்று கடந்த காலத்தில் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டன. அப்படி அதற்கான தொகையை டெபாசிட் செய்து, அதற்கான இடத்தையும் வழங்கினால் அதுபோன்ற இடங்களில் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? கீழ்பெண்ணாத்தூர் கிராமங்கள் நிறைந்த பகுதி. அந்த கிராமப்புற மக்களை முன்னேற்றுவதற்காக ஓர் அரசு கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை அறிவித்து, ஒவ்வொரு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தங்கள் தொகுதிக்குட்பட்ட 10 கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிக்கலாம் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அதோடு விட்டுவிடவில்லை. அந்த அடிப்படையில் அமைச்சர்களையெல்லாம் அழைத்துப் பேசி, சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்ட கோரிக்கைகளில், உங்கள் துறையில் எத்தனை கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று கேட்டார். அதைப் பரிசீலித்தபோது, 46 சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதிகளுக்குள்ளே கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த 46 சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளில் அரசு கலைக் கல்லூரியே இல்லாத தொகுதி எத்தனை என்று பார்த்தபோது, 26 தொகுதிகள் இருந்தன. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.*

ஆகவே, நல்ல கல்லூரிகளெல்லாம் திருவண்ணாமலையில் இருப்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்களுக்குத் தெரியும். கீழ்பெண்ணாத்தூர் ஒரு கிராமம்தான். அதுவும் எனக்கு தெரிந்த ஊர்தான். ஆகவே, உங்களுடைய கோரிக்கைகளெல்லாம் படிப்படியாகப் பரிசீலிக்கப்பட்டு, வெகுவிரைவில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மேம்பாலம்

***58264—திரு. A.R.R. ரகுராமன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் சாத்தூர் நகரம், படந்தால் சந்திப்பு அருகே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை N.H. 44, கி.மீ. 78–ல் உள்ள படந்தால் விலக்கு என்ற பகுதியில் ஏற்படும் விபத்துகளைக் குறைக்கும்பொருட்டு வாகன கீழ்ப்பாலம் அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.